தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994, ஏப்ரல் 5, செவ்வாய்க்கிழமை

பங்குனி 22, ஸ்ரீமுக-திருவள்ளுவர் ஆண்டு 2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்

கற்றான் கருதிச் செயல்."

நோயுற்றவன் தன்மை, நோயின் அளவு, சிகிச்சைக்குரிய காலம் ஆகியவற்றை எல்லாம் மருத்துவமுறை கற்றோர் என்பவர்கள் முறைப்படி எண்ணிப் பார்த்து மருத்துவம் செய்யவேண்டும்.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்னாள் உறுப்பினரான திரு. எஸ். முத்துலிங்கம் அவர்கள் 9.3.1994 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. எஸ். முத்துலிங்கம் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரையிலும் அன்றைய வடாற்காடு மாவட்டம் வந்தவாசி தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அன்னாரது மறைவு குறித்து, அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த அப்பெரியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)